# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 9. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

வாகனத் தரிப்பிடங்கள் அடங்கலாக அனைத்து அலுவலகங்களிலும் கடமையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குமானது.

**பிரத்தியேக தகவல்கள்/ வழிகாட்டல்கள்**

**வேலை வழங்குனர்கள்**

- கைச் சுகாதாரம், உடல் இடைவெளி பேணல் மற்றும் சுவாச நற்பழக்கங்கள் (தும்மும்போதும் இருமும் போதும் வாயினையும் மூக்கினையும் கைக்குட்டை அல்லது முழங்கையினால் மூடிக்கொள்ளுதல்), உபயோகித்த கைக்குட்டைகளையும் முகக்கவசங்களையும் பாதுகாப்பாக அகற்றுதல் போன்ற முன்னெச்சரிக்கைச் செயற்பாடுகளுக்கு அனைத்து ஊழியர்களையும் இயைபாக்குதல்.
- முகக்கவசங்கள், கைகளைச் சுத்திகரிக்கும் திரவ வழங்கிகள்; போன்றன போதுமானளவு கிடைக்கப் பெறுதலை உறுதி செய்தல்.
- அலுவலகத்தின் தேவைப்பாட்டிற்கேற்ப ஆகக்குறைந்தளவு ஊழியர்களை வேலைக்கு அழைப்பதற்கான முறையான திட்டம்.
- ஊழியர்களின் ஆரோக்கிய நிலையினைத் தினமும் அறிந்து கொள்வதற்கான திட்டமொன்றினை ஏற்படுத்தல்.
- காய்ச்சலைப் பரிசோதிப்பதற்காக தேவையேற்படும் வேளைகளில் மாத்திரம் உடல் வெப்பமானிகளைப் பயன்படுத்தப்பட வேண்டும். உடல் வெப்பநிலையானது அலுவலகங்களின் நுழைவிடங்களில் பரிசோதிக்கப்படுமாயின் அகச்சிவப்புக் கதிர்த் தொழினுட்பம் பயன்படுத்தப்படாத உபகரணங்களை உபயோகிப்பது சிறந்தது. மேலும் இதனை முறையாகப் பாவிக்கும் விதம் தொடர்பாக ஊழியர்கள் பயிற்றப்பட வேண்டும்.
- வாடிக்கையாளருக்கு நேரடியாகச் சேவையினை வழங்க வேண்டிய அனைத்து ஊழியர்களும் முகக்கவசங்கள் அணிந்திருப்பதையும் கைகளைச் சுத்திகரிக்கும் கை தூய்மிப்பான்களை தேவையான வேளைகளில் உபயோகிப்பதனையும் உறுதிப்படுத்துதல்.
- தாம் அணியும் சீருடைகளைத் தினமும் கழுவி அணியக்கூடிய விதத்தில் ஊழியர்கள் போதுமானளவு சீருடைகளை வைத்திருப்பதனை உறுதி செய்தல்.
- ஓய்வெடுக்கும் அறையானது போதுமானளவு இடவசதி கொண்டதாகவும் காற்றோட்டமானதாகவும் இருப்பதுடன் ஊழியர்கள் தமது கடமை நிறைவடைந்து செல்லும் வேளைகளில் தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்வதற்கான வசதிகள் இருப்பதனையும் உறுதிசெய்தல்.
- ஊழியர்கள் இலகுவாக அணுகக்கூடியதொரு பொதுவான இடத்தில் (உதாரணமாக: நுழைவாயில், வெளியேறும் வாயில்) கைகழுவுவதற்காக சவர்க்காரத் திரவத்துடன் கூடியதாக கைகழுவும் தொட்டியொன்றினை நிறுவுதல்.
- பொருட்களை (பேனாக்கள், புத்தகங்கள், குவளைகள், தட்டுகள்) பகிர்வதைத் தவிர்க்கவும், தேவைப்படும்போது தனிப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தவும்
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாகத்தின் உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

- காய்ச்சல் அல்லது இருமல் தும்மல் போன்ற சுவாச நோய் அறிகுறிகள் இருக்குமெனின் அதனை நிர்வாகத்தினரிடம் தெரிவித்தல்.
- சுவாச நற்பழக்கங்களைப் பின்பற்றுவதுடன் வாடிக்கையாளர்களிடமும் பிற ஊழியர்களிடமும் இருந்து குறைந்தது ஒரு மீற்றர் தமக்கிடையே இடைவெளியைப் பேணுதல்.

- வேலைத்தலத்தினுள் நுழையும் போதும் வெளியேறும் போதும் மற்றும் வழமையான தங்களது கடமை நேரத்திலும் கைகளைக் கழுவிக் கொள்ளுதல்.
- வழமையான வேலைநேரம் நிறைவடைந்தவுடன் உடலையும் சீருடையையும் சுத்தப்படுத்திக் கொள்ளுதல்.
- அகச்சிவப்புக் கதிர்த் தொழினுட்பம் பயன்படுத்தப்படாத சாதனங்களின் மூலம் உடல் வெப்பநிலையைப் பரிசோதிப்பதாயின் பரிசோதிக்கப்படுபவரின் எதிரில் அல்லாது விலகி நின்று பரிசோதிக்கவும்.
- ஆளடையாள அட்டைகளையோ பிற ஆவணங்களையோ பரிசோதிப்பதாயின் அவற்றைக் கைகளால் தொடாது தாங்கள் வாசிக்கத்தக்கதாக உரியவரின் மூலமே காட்டப்படவைத்து பரிசோதிக்கவும்.
- அடிக்கடி தொடுகைக்குள்ளாகும் மேற்பரப்புக்களைத் தொடர்ச்சியாகத் சுத்தம் செய்து தொற்று நீக்கவும் (கடவைகள் மற்றும் படலைகள்)

**அறிவுறுத்தும் முறைகள்**

நிர்வாகத்தின் மூலம் அனைத்து ஊழியர்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385. Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.



28.06.2020